சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வார்டு–149, வளசரவாக்கம், பாகம் எண்.332ல், வட்ட கழக செயலாளர் த.ரமேஷ் ஏற்பாட்டில் என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி செயல் திட்ட பரப்புரை குறித்து கழக பொருளாளர், டி.ஆர்.பாலு எம்.பி. மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி, பகுதி துணை செயலாளர் வே.மதியழகன், மாமன்ற உறுப்பினர் செல்வி ரமேஷ் எம்.சி., மாவட்ட பிரதிநிதி ஆர்.சிவலிங்கம், பாக நிலை உறுப்பினர் (BLA2) சி.பாலமுருகன், BDA, BLC மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செய்துள்ள சாதனையால்

எத்தனை முனை போட்டிகள் நடந்தாலும் தி.மு.க.வை வீழ்த்த முடியாது!

புதுக்கோட்டையில் – அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, டிச. 25 -

புதுக்கோட்டை மாநகராட்சிக்கு உட்பட்ட வடக்கு ராஜ வீதியில் உள்ள தி.மு.க. மாவட்ட அலுவலகமான பெரியண்ணன் மாளிகையில் மறைந்த தி.மு.க. மாநகர செயலாளர் அ.செந்திலின் முதலாம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. இதில் தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவவி.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே. செல்லபாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, மேயர் திலகவதி செந்தில் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகி கள் கலந்து கொண்டு மறைந்த தி.மு.க. மாநகர செயலாளர் ஆ.செந்தில் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இதன் பின்னர் தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில்:

ஒத்தக்கருத்துடைய கட்சிகள் ஓரணியில் இணைய வேண்டும் என்று எடப்பாடி பழனிச்சாமி கூறுகிறார். ஆனால் டி.டி.வி. தினகரனையோ ஓ.பி.எஸ். ஸையே சேர்த்துக்கொள்கிறேன் என்று சொல்லி இருக்கிறாரா என்பதை அவர் கொடுத்துள்ள பேட்டியிலேயே பார்த்துக் கொள்ளுங்கள். இதிலிருந்து அவர்களுக்குள் ஒத்த கருத்து இல்லை என்பது தெரிகிறது.

பியூஸ்கோயல் அனைவரையும் ஒன்று சேர்ப்பதற்

காக வருகிறார். அவருக்கு தமிழ்நாட்டுடைய அரசியல் தட்பவெட்ப நிலை தெரியாது. அதனால் நிச்சயமாக அவர் நினைப்பது தமிழ் நாட்டில் நடக்காது.

எத்தனை முனை போட்டிகள் நடந்தாலும் தி.மு.க.வை வீழ்த்த முடியாது. சாக்கு போக்கு சொல்வதற்காக நயினார் நாகேந்திரன் இருமுனைப் போட்டி என்பதை முன் வைத்திருக்கிறார். எத்தனை முனை போட்டி வந்தாலும் தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செய்துள்ள இந்த ஐந்தாண்டு கால சாதனை தி.மு.க. கூட்ட ணிக்கு மிகப் பெரிய வெற்றியை நிச்சயம் பெற்று தரும்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெளிவாக சொல்லிவிட்டார். தலைவர் மு.க.ஸ்டாலின் இரண்டாவது முறையாக முதலமைச்சர் ஆக்குவது தான் எனது கடமை என்னுடைய பணி என்று தெளிவாக சொல்லிவிட்டார். இதிலிருந்து முதலமைச்சருக்கான போட்டியில் உதயநிதி இல்லை திமுக தலைவரை முதலமைச்சராக ஆக்குவதற்கு தான் அவர் தேர்தல் களத்தில் மும்முறமாக பணி புரிகிறார்.

எடப்பாடி பழனிச்சாமி அவரது ஆட்சி காலத்தில் பொங்கல் பண்டிகையின் போது ஐயாயிரம் ரூபாய் கொடுத்து இருக்கலாம் கொடுக்காமல் இருந்திருக்கலாம். நாங்கள் தற்பொழுது இதைப் பற்றி சொல்ல மாட்டோம் என்ன என்பது ரகசியமாகத்தான் இருக்கும். திடீரென்று தான் அறிவிக்கப்படும்.

ஒரு கண்ணில் வெண்ணை ஒரு கண்ணில் சுண்ணாம்பு என்பது பாஜகவின் கொள்கை. எங்களின் கொள்கை அல்ல. திருப்பரங்குன்றத்தில் சிக்கந்தர் தர்கா இருக்கிறது. தர்காவில் ஆண்டுதோறும் நடைபெறும் விழா தான் அதற்கு வழிபாடு செய்ய அனுமதி கொடுப்பது தவறில்லை. திருப்பரங்குன்றம் பிரச்சனையை இதுவரை யாரும் எழுப்பியதாக வரலாறு கிடையாது முதல்முறையாக தமிழ்நாட்டில் கால் ஊன்ற வேண்டும் என்பதற்காக எதைச் சொல்லி மக்களை திசை திருப்பலாம் என்பதற்காக பாஜக ஆர்எஸ்எஸ் சோடு சேர்ந்து போட்ட திட்டம். அது இன்று தோல்வி அடைந்துள்ளது. தமிழ்நாடு மக்கள் விழிப்புணர்வு உள்ளவர்கள் அவர்களுக்கு எது சரி எது தவறு என்பது தெரியும்.

இ ஃபைலிங் முறை என்பது விரைந்து அந்த பணியை செய்வதற்காகவும் இருந்த இடத்திலிருந்து வழக்கை பைல் செய்ய முடியும் என்பதற்காக கொண்டுவரப்பட்டது. தற்போது அனைத்து இடத்திலேயுமே ஆன்லைன் இபைலிங் தான் இருக்கிறது. நீதிமன்ற விசாரணை கூட காணொளி காட்சி மூலமாக நடக்கிறது. இ ஃபைலிங் முறையில் தாமதம் ஏதும் இருப்பது தெரிய வந்தால் அது கண்டறியப்பட்டு அந்த தாமதத்தை நீக்குவதற்கான நடவடிக்கையை அரசு செய்யும்.

இ ஃபைலிங் முறையை நீதிமன்றம் வழக்கறிகளுக்காக கொண்டுவந்துள்ளது நீதிமன்றம் இ ஃபைலிங் முறையை கொண்டு வந்துள்ளதால் அதில் அரசு கருத்து சொல்ல இயலாது.

செவிலியர் போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களால் எந்த நெருக்கடியும் வராது. எல்லா நெருக்கடியும் சுலபமாக தீர்க்கப்படும். நிச்சயமாக அனைவரின் ஆதரவோடு மீண்டும் திராவிட மாடல் ஆட்சி பார்ட் 2 திமுக தலைவர் மு. க. ஸ்டாலின் தலைமையில் தொடரும்.

அதிமுகவால் மெகா கூட்டணி அமைக்க முடியாது. திமுக கூட்டணியில் இருந்து ஒரு செங்கலை கூட உருவ முடியாது.

அரசியல் எதிரிகளாக புதிய கட்சிகளையோ எதையுமே பார்க்கவில்லை. திராவிட மாடல் ஆட்சியினுடைய கருத்துக்கு எதிரானவர்களை நாங்கள் எதிரிகளாக பார்க்கிறோமே தவிர யாரையும் நாங்கள் எதிரிகளாக பார்க்கவில்லை.

பழுத்த மரத்தில்தான் கல்லடி படும். அதனால்தான் அனைவரும் திமுகவை நோக்கி வந்தால்தான் அவர்களுக்கு விளம் பரம் கிடைக்கும். தி.மு.க.வை சொல்லித் தான் வர முடியும் பேச முடியும். திமுக தான் எதிரி என்று சொன்னால்தான் திரும்பி பார்ப்பார்கள். அதனால்தான் திமுகவை சொல்லி வருகின்றனர். இதிலிருந்தே தி.மு.க. என்பது தமிழ்நாட்டின் அசைக்க முடியாத சக்தி என்பதை தெரிந்து கொள்ளலாம்.

நயினார் நாகேந்திரனுக்கு நாடக கம்பெனி எல்லாம் பழைய காலத்தில்தான் இருந்தது. தற்போது வள்ளி திருமணம் நாடகம் எல்லாம் போட்டால் யாரும் போய் பார்ப்பதில்லை. அதனால் அவருக்கு இதெல்லாம் தெரியவில்லை தூக்கத்திலிருந்து தற்போது தான் விழி த்துள்ளார். தலைவர் பதவி கிடைத்தவுடன் தூக்கத்தில் இருந்து விழித்தவர் தான் பார்த்த வள்ளி திருமண நாடகங்களையும் மற்ற நாடகங்களையும் நினைத்துக் கொண்டு விடிய விடிய நடக்கும் என்று நினைத்து சொல்லி வருகிறார். நிச்சயமாக இது நாடக கம்பெனி அல்ல நல்ல அறிக்கைகளையும் நல்ல திட்டங்களையும் தமிழ்நாட்டிற்கு தருகின்ற தேர்தல் அறிக்கைக்குழு தான் தி.மு.க. தேர்தல் அறிக்கை குழு என்று தெரிவித்தார்.

2026 – புதுச்சேரி தேர்தல்! ஆர்.சிவா – ஏ.எம்.எச்.நாஜிம் உள்பட

புதுச்சேரி கழக நிர்வாகிகள் - கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் நேரில் ஆலோசனை!

அமைச்சர் கே.என்.நேரு – ஆர்.எஸ்.பாரதி உடனிருந்தனர்!

சென்னை, டிச. 25-

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை எதிர்வரும் 2026- புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, புதுச்சேரி மாநிலக் கழக அமைப்பாளர் ஆர்.சிவா, எம்.எல்.ஏ., மற்றும் புதுச்சேரி-காரைக்கால் மாநிலக் கழக அமைப்பாளர் ஏ.எம்.எச்.நாஜிம், எம்.எல்.ஏ., மற்றும் மாநில நிர்வாகிகள் நேரில் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று முன்தினம் (23-12-2025) காலை, புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளர் ஆர்.சிவா, எம்.எல்.ஏ., மற்றும் புதுச்சேரி-காரைக்கால் மாநில தி.மு.க. அமைப்பாளர் ஏஎம்எச். நாஜிம், எம்.எல்.ஏ., மற்றும் புதுச்சேரி மாநில துணை அமைப்பாளர் வி.அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., பொருளாளர் இரா.செந்தில்குமார், எம்.எல்.ஏ. புதுச்சேரி மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல்.சம்பத், எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.நாகதியாகராஜன், எம்.எல்.ஏ., ஆகியோர் நேரில் சந்தித்து, எதிர்வரும் 2026-ல் நடைபெற உள்ள புதுச்சேரி மாநில சட்டப்பேரவை தேர்தல் குறித்து ஆலோசனை நடத்தினர். அதுபோது கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

“என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” – இன்று

சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, டிச.25-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 8.12.2025 அன்று என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற திமுக மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட செயல்திட்டத்தின் படி 25.12.2025 வியாழக்கிழமை அன்று சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள் விவரம்.

கொளத்தூர் கிழக்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 66அ , பாகம்: 128 , இடம்: எண். 34/22 திருவேங்கடம் தெரு வெற்றி நகர் சென்னை 82.

மாலை: 4.30 மணி: வட்டம் 66அ , பாகம்: 124 , இடம்: எண். 57/24 தங்கவேல் தெரு வெற்றி நகர் சென்னை 82.

மாலை: 5.00 மணி: வட்டம் 66அ , பாகம்: 130 , இடம்: எண். 6/11 மூர்த்தி சந்து வெற்றி நகர் சென்னை 82.

மாலை: 5.30 மணி: வட்டம் 66அ , பாகம்: 129 , இடம்: எண். 13/3 சிவப்பிரகாசம் தெரு வெற்றி நகர் சென்னை 82.

கொளத்தூர் மேற்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 65அ. பாகம்: 66. இடம்: மகாத்மா காந்தி நகர், கொளத்தூர்-99.

மாலை: 4.30 மணி: வட்டம் 65அ. பாகம்: 64. இடம்: சிவசக்தி நகர், கொளத்தூர்-99.

மாலை: 5.00 மணி: வட்டம் 64அ. பாகம்: 18. இடம்: ரோகினி தெரு, சென்னை-49.

மாலை: 5.30 மணி: வட்டம் 66. பாகம்: 74. இடம்: வளர்மதி நகர், கொளத்தூர்-99.

துறைமுகம் மேற்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 57, பாகம்: 138, 139, 140. 141. இடம்: மணகப்பன் தெரு, யானைகவுனி, சென்னை.

எழும்பூர் வடக்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 78அ, பாகம்: 72, 73, 74.

மேற்கண்ட பாகங்களில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ பகுதி / வட்ட நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், BLA2, BDA, BLC ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு அறிவித்துள்ளார்.

சைதாப்பேட்டை வார்டு–139, 142–ல்

தூய்மைப் பணியாளர்களுக்கான உணவு வழங்கும் கூடம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

சென்னை, டிச.25-

முதலமைச்சரின் உணவு திட்டத்தின் சுழற்சி முறையில் பணிபுரிந்து வரும் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை, மாலை, இரவு என மூன்று வேலைகளிலும் உணவு வழங்கப்பட்டு வருகிறது. இந்த உணவினை தூய்மைப் பணியாளர்கள் அமர்ந்து சாப்பிடுவதற்கு ஏதுவாக உணவு வழங்கும் கூடம் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட 16 வார்டுகளிலும் 20 இடங்களில் அமைக்கப்பட்டு வருகிறது.

இதில், கோடம்பாக்கம் மண்டலம், சைதாப்பேட்டை, வார்டு-139ல் ரூபாய் 19.70 இலட்சம் மதிப்பீட்டில் 600 சதுர அடி பரப்பளவில் சைதாப்பேட்டை, கங்கை அம்மன் கோவில் தெருவில் கட்டப்பட்ட உணவு கூடம் மற்றும் ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டில் 500 சதுர அடி பரப்பளவில் வார்டு-142, மேற்கு ஜோன்ஸ் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள உணவு கூடம் ஆகிய தூய்மைப் பணியாளர்களுக்கான 2 உணவு கூடங்களை நேற்று (24.12.2025) மக்கள் நல்வாழ்வுத் அமைச்சர் மா. சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

இந்த உணவு வழங்கும் கூடத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், மேசை நாற்காலிகள், மின் விசிறி, மின் விளக்கு உள்ளிட்ட பல் வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுகளின்போது, மண்டலக்குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் ப. சுப்பிரமணி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில்

979 இடங்களில் புதிதாக வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தம் மேற்கொள்ளும் பணி!

வாக்குச்சாவடி நிலை அலுவலர் நியமனம்!

சென்னை, டிச.25-

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்கள் அமைந்துள்ள 979 இடங்களிலும் 23.12.2025 முதல் 18.1.2026 வரை அனைத்து நாட்களிலும் (பண்டிகை நாட்கள் நீங்கலாக) காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை புதிதாக வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தம் மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கான படிவங்களை வழங்கிடவும், பூர்த்தி செய்து படிவங்களைப் பெறுவதற்கும் ஒவ்வொரு இடத்திலும். ஒரு வாக்குச்சாவடி நிலை அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் உள்ள வாக்குச்சாவடி மையங்கள் அமையப்பெற்ற 979 இடங்களிலும் 23.12.2025 முதல் 18.01.2026 வரை அனைத்து நாட்களிலும் (பண்டிகை நாட்கள் நீங்கலாக) காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை புதிதாக வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தம் மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கான படிவங்களை வழங்கிடவும், பூர்த்தி செய்து படிவங்களைப் பெறுவதற்கும் ஒவ்வொரு இடத்திலும். ஒரு வாக்குச்சாவடி நிலை அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல் ஒவ்வொரு வார்டு அலுவ லகங்களிலும், வாக்குச்சாவடி மையங்களிலும் வைக்கப்பட்டுள்ளது. மேலும் தேர்தல் இணையதளத்திலும் (VOTERS' SER VICE PORTAL) பார்வையிட்டு தெரிந்து கொள்ளலாம்.

இதனைப் பார்வையிட்டு வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்கள், வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தம் மேற்கொள்ளுதல் ஆகிய வற்றிற்கானப் படிவங்களை இங்கு நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம், படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து வழங்கிடலாம்.

இது தொடர்பான மேலும் விவரங்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டு மைய எண் 1913ல் தொலைபேசியின் வாயிலாக கேட்டும் தெரிந்து கொள்ளலாம்.

தலைமைச் செயலகத்தில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் நேற்று முன்தினம் (23.12.2025) நடப்பு சம்பா பருவத்தில் நெல் கொள்முதலுக்கு தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகள், பொது விநியோகம் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து உணவுப் பொருள் வழங்கல் துறை அலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நிர்வாக இயக்குனர் முனைவர் ஆ.அண்ணாதுரை, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் சு.சிவராசு, உள்பட உணவுத் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நேற்று முன்தினம் (23.12.2025) ”சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா நடத்துவது குறித்து தொடர்புடைய துறை அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் திருமதி ச.வளர்மதி, மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.